**கவனிக்க.-** *18.1.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1795 - 2013 ජනවාරි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.24

*1795 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 74 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 74 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

உப பொலிஸ் பரிசோதகர் பதவி

*2012.11.16 ஆந் திகதிய 1785 ஆம் இலக்கம் கொண்ட பகுதி I : தொகுதி (IIஅ) அரச வர்த்தமானி அறிவித்தலின்கீழ் வெளியிடப்பட்ட உப பொலிஸ் பரிசோதகருக்கான ஆட்சேர்ப்பு அறிவித்தலின்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2013.02.25 வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

பொலிஸ் மா அதிபர்.

2013.01.08.

1-679

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**

களநிலை/அலுவலக குழு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012 (2013)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின்கீழ் காணப்படும் சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவின் களநிலை/அலுவலக குழு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை பெறுபேறு மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் தொழில் நிபுணத்துவப் பரீட்சைப் பெறுபேறு என்பனவற்றிற்கு அமைய தகைமைகள் கொண்ட அபேட்சகர்கள் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு நியமிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவர். (எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் திறன் ஒழுங்கில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையினைப்போல் இரு மடங்கானவர்கள் தொழில் நிபுணத்துவப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.)

3. ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி, அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங் களையோ அல்லது சகல வெற்றிடங்களையுமோ நிரப்பாதுவிடும் அதிகாரத்தை செயலாளர் கொண்டுள்ளார்.

4. **சம்பள அளவுத்திட்டம்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் கீழ் எம்என் 5-2006(ஏ) - ரூபா 16,720 - 320 x 10 - 365 x 11 - 450 x 15 - ரூபா 30,685.

நியமனம் பெற்று மூன்று (3) வருட காலத்தினுள் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் என்பதுடன் நியமனம் பெற்று 5 வருடங்கள் நிறைவடைய முன்னர் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இற்கு ஏற்ப மொழியில் நிபுணத்துவம்பெற வேண்டும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும்.

6. **தகைமைகள் :**

6.1 கல்வித் தகைமைகள்.- பொருளியல் விஞ்ஞானம், வணிக விஞ்ஞானம், முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், சமூக விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், தகவல் தொழில்நுட்பம் அல்லது விவசாய விஞ்ஞானம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பு சித்தியுடனான நான்கு வருட விசேட பட்டம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பட்ட பெறுபேற்றினை எதிர்பார்த்திருக்கும் நபர்கள் விண்ணப்பிக்க முடியாது.

6.2 உடற் தகைமைகள்.- சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.

6.3 ஏனைய தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான சகல தகுதிகளையும் நிறைவுசெய்யும் விதத்தில், விண்ணப் பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அத்தகுதிகள் சகல விதத்திலும் நிறைவுசெய்யப் பட்டிருக்க வேண்டும்.

7. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது 21 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் காணப்பட வேண்டும்.

8. 8.1 *ஆட்சேர்ப்பு முறைமை.-* எழுத்துப் பரீட்சை மாச்சு மாதம் இறுதியில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

8.2 *பரீட்சை முறைமை :*

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

(iii) பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி ஏற்படும்.

(iv) வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி பிரசுரங்களுக்கிடையில் இணங்காமை காணப்படின் சிங்கள மொழி பிரசுரம் செல்லுபடியாகும்.

8.3 *பரீட்சைப் பாடங்கள்.-* எழுத்துப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது :

| *விடயம்* | *காலம்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. அறிவுத்திறன் | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 | 40% |
| 2. நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

8.4 விடய பரிந்துரை.- அறிவுத்திறன் - எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.-

(i) தேசிய பொருளாதார அபிவிருத்தியில் சிறு வியாபார அபிவிருத்தி துறையின் முக்கியத்துவத்தினை அறிந்துகொள்ளல்.

(ii) தேசிய அபிவிருத்திக்கு பொருந்தக்கூடிய விதத்தில் வியாபார சந்தர்ப்பத்தினை அடையாளங்காணல்.

(iii) பிரதேச ரீதியில் காணப்படும் வளங்கள் மற்றும் தேசிய, சர்வதேச சந்தை வாய்ப்பினை அடையாளங்கண்டு அதற்கிணங்க முயற்சியாண்மை வழிகாட்டல்.

(iv) முயற்சியாண்மை திறன் கொண்டவர்களை அடையாளங் கண்டு அவர்களை சிறு வியாபாரத் துறையில் ஈடுபடுத்தல்.

(v) சிறு மற்றும் நுண் வியாபாரம் தொடர்பான அறிவு.

(vi) முயற்சியாளர்களுக்கு அவசியமான முகாமைத்துவ மற்றும் ஏனைய நிதி மற்றும் துணைச் சேவைகள் தொடர்பாக அறிவூட்டல்.

(vii) இளைஞர், யுவதிகளை முயற்சியாண்மை துறையில் ஊக்கப்படுத்தல், அவர்களில் மனோபாவ மாற்றத்தினை ஏற்படுத்தல் மற்றும் தூண்டுதலை ஏற்படுத்துவதற்கு அவசியமான பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கமைத்தல்

(viii) வியாபார செயற்பாடுகளில் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கு முன்வைப்பதற்கு அவசியமான வியாபார திட்டமிடல், கருத்திட்டங்களை தயாரித்தல்.

(ix) வியாபார தகவல்களை சேகரித்தல் மற்றும் அவசியமானவர்களுக்கு தகவல்களை வழங்குதல்.

*நுண்ணறிவுப் பரீட்சை.-* பல்தேர்வு மற்றும் சிறு விடை மாதிரியிலான 50 வினாக்களைக் கொண்ட வினாத் தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

வாக்கியம் கொண்ட, எண்ணிக்கை மற்றும் உருவ உள்ளடக்கங்கள் மூலம் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் முடிவுகள் மற்றும் பிரதிபலிப்புகளை பரீட்சிப்பதன் மூலம் விண்ணப்பதாரிகளின் புரிந்துகொள்ளும் இயலுமை மற்றும் அறிவினை அளவிடுதல் இதன் மூலம் கருதப்படுகின்றது.

8.5 *தொழில் நிபுணத்துவப் பரீட்சை.-* எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் திறன் ஒழுங்கில், ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையினைப் போல் இரு மடங்கானவர்கள் தொழில் நிபுணத்துவப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழில் நிபுணத்துவப் பரீட்சையிலேயே தகைமை பரீட்சிக்கப்படுவதுடன் அதில் வழங்கப்படும் புள்ளிகளின் அளவு கீழே காட்டப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| முன்வைக்கும் திறன் | 30 |
| தகவல் தொழில்நுட்ப எழுத்தறிவுப் பரீட்சை | 20 |
| மொத்தம் | 50 |

9. **தவறான தகவல்களுக்கான தண்டனை.-** விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்யும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு இணங்க எந்த அபேட்சகராவது தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு விடயம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பொய்யானது என அறியப்பட்டால் அவரை அரச சேவையில் இருந்து நீக்க முடியும். விண்ணப்பப் பத்திரமொன்றை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டையொன்று விநியோகிக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவ

தற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது எனக் கருதப்படக் கூடாது. பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப் படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி ஏற்படும்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 800 ஆகும். அதனை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் ஏதாவது பிரதேச செயலாளர் அலுவலகத்திலோ அல்லது மாவட்ட செயலாளர் அலுவலகத்திலோ செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை குறித்த கட்டத்தில் விலகாதவாறு ஒட்ட வேண்டும். (அதன் புகைப்பட பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

11.

11.1 விண்ணப்பப்படிவம்.- விண்ணப்பப்படிவம் ஏ4 (செ. மீ. 22 x 29) (சாதாரண ஹாப்சீட்) அளவிலான கடதாசி பாவித்து-

(i) இலக்கம் 1-3 பந்திகள் முதலாவது பக்கத்திலும்,

(ii) இலக்கம் 4 தொடக்கம் முன்னால் வரும் பந்திகள் ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் விதத்தில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப்பப்படிவங்கள், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக் கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்பட பிரதி யொன்றினை விண்ணப்பதாரிகள் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்று விண்ணப்ப தாரிகள் சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட முடியும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும்.

(iv) சகல தகவல்களும் தமது சொந்தக் கையெழுத்தில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.

11.2 பரீட்சைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2013, பெப்புருவரி 26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் :-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

11.3 விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2012 (2013)" தெளிவாக குறிப்பிடல் வேண்டும். உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

11.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளிலுள்ள அதிகாரம்பெற்ற அலுவலர், ரூபா 2,40,360 இற்கு வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

11.5 விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப் பட்டதன் பின்னர் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பப்பத்திரத்தினதும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகளையும், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியில் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு உங்கள் கோரிக்கையின் பிரதி ஒன்றை உங்களிடம் வைத்துக்கொண்டு, இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும்.

12. விண்ணப்பதாரி தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை மேற்பார்வை யாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. இதில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் காணப்படின், அது தொடர்பாக இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரர்களும் அவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு இணங்க செயற்படுவதற்கான கடப்பாட்டினை கொண்டுள்ளனர்.

14. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதப்படக் கூடாது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கே. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள்
அபிவிருத்தி அமைச்சு.

2013.01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் களநிலை/அலுவலக குழு 2, முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012 (2013)**

Open Competitive Examination for Recruitment to the Post of Entreneurship Development Training Officer - Grade II Field/ Office Category 2 in the Ministry of Youth Affairs and Skills Development - 2012 (2013)

(அலுவலக பாவனைக்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

| | |
|---|---|
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

*கடமை மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3

| | |
|---|---|
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

1. 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்துக்களில்) உதாரணம் : PERERA, A. B. C. :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

1.5 பால் : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

2.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

3. 3.1 விண்ணப்பதாரரின் நிரந்தர மாவட்டம் :----.

3.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.

3.3 வசிக்கும் காலப்பகுதி :----.

3.4 கிராமசேவகர் பிரிவு :----.

4. 4.1 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

4.2 2013.02.26 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4.3 விவாகமானவர்/விவாகமாகாதவர் :

விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. கல்வித் தகைமை :

5.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரம் :

(i) பரீட்சை வருடம் மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| விடயம் | தரம் |
|---|---|
| | |

6. பட்டம் தொடர்பான விபரம் :

(i) பட்டம் :----.
(ii) வகுப்பு :----.
(iii) பல்கலைக்கழகம் :----.

7. தொழிற் தகைமை :

(i) :----.
(ii) :----.
(iii) :----.

8. தாங்கள் எப்போதாவது ஏதாவது குற்றச்சாட்டுக்கு நீதிமன்றத் தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :-

(உரிய கூட்டினுள் ✓ குறியிடவும்)

ஆம் இல்லை

(ஆம் எனின் விபரம் தருக.)

9. பரீட்சைக் கட்டணம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) இரசீது இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்தப்பட்ட கட்டணம் :----.

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்களிடம் வைத்திருங்கள்)

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவை மற்றும் செம்மையானவையென கௌரவமாக தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் ஏதாவது பகுதியினை பூரணப் படுத்தாமை மற்றும்/ அல்லது பிழையாக நிரப்புவதால் ஏற்படக்கூடிய நட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும், இதன் சகல பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்பட முன்னர் தகுதியற்றவனாவதுடன் நியமனம் கிடைத்த பின்னர் சேவையில் இருந்து விலக்கப்பட உடன்படுவதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவிக்கின்றேன்.

(ஈ) குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

11. (அ) இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் ...................................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோக முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

**குறிப்பு**.- அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளிலுள்ள அதிகாரம்பெற்ற அலுவலர், ரூபா 2,40,360 இற்கு வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

1-775

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.